අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

**உயர் தர தொழிற் பாடத்துறை (பதின் மூன்று வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டம்)**

**தரம் 12 இற்கு மாணவர்களை அனுமதித்தல் 2024- 2025**

உயர் தர தொழிற் பாடத் துறையின் கீழ் தரம் 12 இல் மாணவர்களை அனுமதிப்பதற்காக விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன. 2024ம் ஆண்டு முதல் **தொழிற் பாடத் துறை நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைகளில்** (உரிய பாடசாலைகளின் பெயர் பட்டியலை இதனூடாக பெற்றுக் கொள்ளவும்,) **தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு அனுமதி பெற்றுக் கொள்வதற்காக** மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் இப் பாடத்துறைக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது **க.பொ.த (சா.த) பரீட்சை சித்தி பெற்றுள்ளனரா அல்லது பெறவில்லையா என்பது தொடர்பில் கருத்தில் கொள்ளப்படமாட்டாது**.

தொழிற் பாடத் துறையின் கீழ், **பாடசாலையில் தரம் 12 இற்குரிய கல்விச் செயற்பாடுகளை நிறைவு செய்த பின்னர், தரம் 13 இல்** கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்பாடங்களுள் ஏதேனும் ஒன்றின் கீழ் **NVQ (தேசிய தொழிற் தகைமை) 04ம் மட்ட தொழிற் பயிற்சிப் பாடநெறியொன்றை நிறைவு செய்வதற்கான வாய்ப்பினை மாணவர்கள்** பெற்றுக் கொள்வர்.

| | |
|---|---|
| 1. குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு | 14. உணவு உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி |
| 2. சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு | 15. நீரியள் வளத் தொழில்நுட்பக் கல்வி |
| 3. உடற் கல்வி மற்றும் விளையாட்டு | 16. பெருந்தோட்டப் பயிர்ச்சை உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி |
| 4. அரங்கியற் கலை | 17. நிர்மாணத் தொழில்நுட்பவியல் கல்வி |
| 5. நிகழ்ச்சி முகாமைத்துவம் | 18. மோட்டார் இயந்திர தொழில்நுட்பக் கல்வி |
| 6. கலை மற்றும் கைவினை | 19. மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி |
| 7. உள்ளக வடிவமைப்பு | 20. ஜவுளி மற்றும் ஆடைத் தொழில்நுட்பக் கல்வி |
| 8. நவநாகரீக வடிவமைப்பு | 21. உலோக புணைவுத் தொழில்நுட்பக் கல்வி |
| 9. கிரபிக் வடிவமைப்பு | 22. அலுமினிய புணைவுத் தொழில்நுட்பக் கல்வி |
| 10. சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் | 23. கலை மற்றும் வடிவமைப்பு |
| 11. நிலத்தோற்ற வடிவமைப்பு | 24. சுற்றாடல் கல்வி |
| 12. பிரயோக தோட்டக் கலைத் தொழில்நுட்பக் கல்வி | 25. கணிணி வன்பொருள் மற்றும் வலையமைப்பு |
| 13. கால்நடை உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி | 26. உற்பத்தி |

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தாங்கள் அனுமதி பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் பாடசாலையின் அதிபருக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக தகவல்களுக்கு வார நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 வரை பின்வரும் தொலைபேசி 0112787136 / 0112786746 இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

பி.பி விதானகே
கல்விப் பணிப்பாளர் (அனைவருக்கும் கல்வி)

tamilguru.lk